ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2123/35 - 2019 මැයි මස 15 වැනි බදාදා - 2019.05.15
*2123/35 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.-பி 9/2016*

**2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டம்**

*2015ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 118ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 142ஆம் பிரிவின்கீழ் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

வைத்திய கலாநிதி ராஜித சேனாரட்ன,
சுகாதார, போசணை மற்றும்
சுதேச வைத்திய அமைச்சர்.

கொழும்பு,
*2019, மே 11.*

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள், 2019ஆம் ஆண்டின் மருந்துகள் (விலைகளின் மீதான உச்சவரம்பு) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன் அவை வர்த்தமானியில் வெளியிடப்படும் தேதியன்று அவை நடைமுறைக்கு வருதலும் வேண்டும். (அது இதனகத்துப்பின்னர் "இயைபான தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்).

2. இயைபான தேதியிலிருந்து (இதனகத்துப்பின்னர் "அட்டவணைப்படுத்தப்பட்ட மருந்துகள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள மருந்துகளினது விலைகளின் மீதான உச்சவரம்பு ஒன்று இருத்தல் வேண்டும்.

3. அட்டவணைப்படுத்தப்பட்ட மருந்துகள் தொடர்பில் அதிகபட்ச சில்லறை விலையின் எல்லைகள், அட்டவணைப் படுத்தப்பட்ட மருந்துகளின் எல்லா வணிகப்பெயர்களுக்கும், இனப்பெயர்களுக்கும், ஏற்புடையனவாதல் வேண்டும்.

1A — PG 4518 - 617 (2019/05)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

4. இயைபான தேதியன்றும் அதன்பின்னரும், விற்பனை நோக்கத்துக்காக இதற்கான அட்டவணையின் நிரல் II இல் தரப்பட்டுள்ள ஏதேனும் அட்டவணைப்படுத்தப்பட்ட மருந்தை உடைமையில் வைத்திருக்கின்ற உற்பத்தியாளர், இறக்குமதியாளர், வியாபாரி, விநியோகிப்பாளர், மருந்தாளர், மருத்துவத்தொழிலர், பல்மருத்துவர், விலங்கு அறுவை மருத்துவர் எவரும், ஒரு தனியார் மருத்துவ நிறுவனம் உட்பட்ட மருத்துவ நிறுவனம், மருந்தகம் எதுவும் அல்லது ஆள் எவரும், அதன் நிரல் V இலுள்ள நேரொத்த பதிவில் விதிக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலைக்குமேலாக அத்தகைய மருந்தை விற்பனைசெய்தலாகாது.

5. இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள ஏதேனும் மருந்தை விற்பனைசெய்கின்ற அல்லது விற்பனைக்கு முன்வைக்கின்ற 4ஆம் ஒழுங்குவிதியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஆள் ஒவ்வொருவரும் அல்லது நிறுவனம் ஒவ்வொன்றும், அத்தகைய மருந்தின் தோதான பெயரையும் விலையையும் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்ற பற்றுச்சீட்டொன்றை வழங்குதல் வேண்டும்.

6. அட்டவணையில் விதிக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலைக்குக் குறைந்தவொரு விலையில் ஒரு மருந்தைத் தற்போது விற்பனைசெய்கின்றவரும் விற்பனை நோக்கத்துக்காக அட்டவணைப்படுத்தப்பட்ட அத்தகைய மருந்தை உடைமையில் வைத்திருக்கின்றவருமான எவரேனும் உற்பத்தியாளர் அல்லது இறக்குமதியாளர், ஏலவேயுள்ள விலையைப் பதினான்கு தசம் நான்கு சதவீதத்தினால் மட்டுமே (14.4%) அதிகரிக்கலாம் என்பதுடன் விற்பனை நோக்கத்துக்காக அத்தகைய அட்டவணைப்படுத்தப்பட்ட மருந்தை உடைமையில் வைத்திருக்கின்ற எவரேனும் வியாபாரி, விநியோகிப்பாளர், மருந்தாளர், மருத்துவத்தொழிலர், பல் மருத்துவர், விலங்கு அறுவை மருத்துவர், ஒரு தனியார் மருத்துவ நிறுவனமுட்பட்ட மருத்துவ நிறுவனம், மருந்தகம் அல்லது ஆள் அத்தகைய மருந்தை அத்தகைய மீளாய்வுசெய்யப்பட்ட விலையில் தொடர்ந்து விற்பனைசெய்தலும் வேண்டும்.

7. அட்டவணைப்படுத்தப்பட்ட மருந்தின் ஏதேனும் மருந்தின் தன்மை அல்லது வீரியம் அத்தகைய அட்டவணையில் குறித்துரைக்கப்படாதவிடத்து, அவ்வாறு குறித்துரைக்கப்படாத மருந்தின் தன்மை அல்லது வீரியத்துக்குமான அதிகபட்ச சில்லறை விலையின் எல்லை, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையினால் நிர்ணயிக்கப்படவேண்டிய அதிகபட்ச சில்லறை விலையின் எல்லையாக இருத்தல் வேண்டும்.

8. இயைபான தேதியன்று விற்பனை நோக்கத்துக்காக உற்பத்திசெய்யப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட மருந்துகளின் கையிருப்பிலுள்ள இனத்தின் ஒவ்வோர் அலகையும் உடைமையில் வைத்திருக்கின்ற அல்லது சந்தையில், ஒரு தனியார் மருத்துவ நிறுவனமுட்பட்ட மருத்துவ நிறுவனத்தில், மருந்தகத்தில் அல்லது ஆளிடம் கிடைக்கக்கூடியதாகவுள்ள அத்தகைய மருந்தின் இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறான அதிகபட்ச சில்லறை விலை அல்லது தற்போதுள்ள சில்லறை விலை, இவற்றுள் எது குறைந்ததாகவுள்ளதோ அது, செயல்முறைக்குகந்தவரை விரைவாக ஆயின் எவ்வாறாயினும் இயைபான தேதியிலிருந்து நாற்பத்தைந்து நாட்களைக்கொண்ட காலப்பகுதி முடிவுறுமுன்னர், அதன் வர்த்தகப் பொதியில் அல்லது சுட்டுத்துண்டில் அச்சிடப்படுதல் அல்லது குறியிடப்படுதல் வேண்டும்

9. எட்டாம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஒவ்வோர் அலகினதும் அதிகபட்ச சில்லறை விலை, இயைபான தேதியன்றும் அதன் பின்னரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு இருத்தல் வேண்டும். அட்டவணையில் தரப்பட்டுள்ள அதிகபட்ச சில்லறை விலை, இயைபான தேதியிலிருந்து செல்லுபடியானதாகவும் பயனுள்ளதாகவும் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

10. இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறி, விற்பனைநோக்கத்துக்காக அட்டவணைப்படுத்தப்பட்ட மருந்தொன்றைத் தனதுடைமையில் வைத்திருக்கின்ற எவரேனும் உற்பத்தியாளர், இறக்குமதியாளர், வியாபாரி, விநியோகிப்பாளர், மருந்தாளர், மருத்துவத்தொழிலர், பல்மருத்துவர், விலங்கு அறுவை மருத்துவர், ஒரு தனியார் மருத்துவ நிறுவனமுட்பட்ட மருத்துவ நிறுவனம், மருந்தகம் அல்லது ஆள் தவறொன்றைப் புரிகின்றார் அல்லது புரிகின்றது என்பதுடன் 2015ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 131ஆம் பிரிவின்கீழ் விளக்கத்துக்குட்படுத்தப்படத்தக்கவராதலும் விளக்கத்துக்குட்படுத்தப்படத்தக்கதாதலும் வேண்டும்.

11. விற்பனை நோக்கத்துக்காக அட்டவணைப்படுத்தப்பட்ட மருந்துகளை உடைமையில் வைத்திருக்கின்ற ஒவ்வோர் உற்பத்தியாளரும், இறக்குமதியாளரும், வியாபாரியும், விநியோகிப்பாளரும், மருந்தாளரும், மருத்துவத்தொழிலரும், பல்மருத்துவர், விலங்கு அறுவை மருத்துவர்,ஒரு தனியார் மருத்துவ நிறுவனமுட்பட்ட ஒவ்வொரு மருத்துவ நிறுவனமும், ஒவ்வொரு மருந்தகமும் அல்லது ஒவ்வோர் ஆளும், இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள அட்டவணைப்படுத்தப்பட்ட மருந்துகளின் அதிகபட்ச சில்லறை விலையை ஒவ்வொரு சில்லறை வெளிநிலையத்திலும் வெளிகாட்டிவைத்தல் அவரது அல்லது அதன் கடமையாதல் வேண்டும்.

12. இரண்டாயிரத்துப் பதினேழாம் ஆண்டு திசெம்பர் 14ஆந்தேதிய 2049/31ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளினாலும், 2018ஆம் ஆண்டு ஓகத்து 31ஆந்தேதிய 2086/37ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளினாலும் திருத்தப்பட்டவாறான 2016ஆம் ஆண்டு ஒற்றோபர் 21ஆந்தேதிய 1989/61ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க விலைகளின் மீதான உச்சவரம்பு ஒழுங்குவிதிகள் இத்தால் ஒழிக்கப்படுகின்றன.

13. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்துக்காக :–

"பல்மருத்துவர்" என்பது (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தில் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

"மருத்துவத்தொழிலர்' என்பது, (105ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்திலுள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"தனியார் மருத்துவ நிறுவனம்" என்பது, 2006ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க, தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவுசெய்தல்) சட்டத்தில் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

"விலங்கு அறுவை மருத்துவர்" என்பது 1956 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க விலங்கு அறுவை மருத்துவர்கள் மற்றும் மருத்துவத் தொழிலர் சட்டத்தின் கீழ் விலங்கு அறுவை மருத்துவர் ஒருவராக அல்லது விலங்கு மருத்துவத் தொழிலராக பதிவு செய்யப்பட்டுள்ள ஒரு ஆள் என்று பொருள்படும்.

**அட்டவணை**

**மருந்துகளின் அதிகபட்ச சில்லறை விலை**

| நிரல் I | நிரல் II<br>**இனப் பெயர்** | நிரல் III<br>**உட்கொள்வழி/ மருந்தின் தன்மை** | நிரல் IV<br>**வீரியம்** | நிரல் V<br>**அதிகபட்ச சில்லறை விலை (இலங்கை ரூபா)** |
|---|---|---|---|---|
| 1 | அல்பென்டசோல் | மாத்திரை / வில்லை | 400 மி.கி. | 36.04 |
| | | | | |
| 2 | அமொக்சிசிலின் + கிலாவுலினிக் அமிலம் | வாய்மூல கரைசல் மருந்து | 156 மி.கி / 5 மி.லீ. | 345.35 |
| | அமொக்சிசிலின் + கிலாவுலினிக் அமிலம் | மாத்திரை/ வில்லை | 375 மி.கி. | 42.52 |
| | அமொக்சிசிலின் + கிலாவுலினிக் அமிலம் | மாத்திரை/ வில்லை | 625 மி.கி. | 72.07 |
| | அமொக்சிசிலின் + கிலாவுலினிக் அமிலம் | ஊசி மருந்து | 1.2 கி. | 757.96 |
| | | | | |
| 3 | கிலாரித்ரோமைசின் | மாத்திரை/ வில்லை | 250 மி.கி. | 43.85 |
| | கிலாரித்ரோமைசின் | மாத்திரை/ வில்லை | 500 மி.கி. | 88.89 |
| | கிலாரித்ரோமைசின் | வாய்மூல கரைசல் மருந்து | 125 மி.கி. / 5 மி.லீ. | 523.72 |
| | | | | |
| 4 | அசித்ரோமைசின் | மாத்திரை/ வில்லை | 250 மி.கி. | 45.17 |
| | அசித்ரோமைசின் | மாத்திரை/ வில்லை | 500 மி.கி. | 63.37 |
| | அசித்ரோமைசின் | வாய்மூல கரைசல் மருந்து | 200 மி.கி. / 5 மி.லீ. | 210.21 |
| | | | | |
| 5 | செவுயுரொக்செம் | மாத்திரை/ வில்லை | 250 மி.கி. | 54.66 |
| | செவுயுரொக்செம் | மாத்திரை/ வில்லை | 500 மி.கி. | 87.21 |
| | | | | |
| 6 | டொக்சிசைக்லின் | மாத்திரை/ வில்லை | 100 மி.கி. | 12.14 |
| | | | | |
| 7 | ஏசைக்ளோவிர் | மாத்திரை/ வில்லை | 200 மி.கி. | 44.44 |
| | | | | |
| 8 | சிப்ரோபுளொக்சசின் | மாத்திரை/ வில்லை | 250 மி.கி. | 6.91 |
| | சிப்ரோபுளொக்சசின் | மாத்திரை/ வில்லை | 500 மி.கி. | 10.22 |
| | | | | |
| 9 | லெவோபுளொக்சசின் | மாத்திரை/ வில்லை | 250 மி.கி. | 29.07 |
| | லெவோபுளொக்சசின் | மாத்திரை/ வில்லை | 500 மி.கி. | 48.05 |
| | | | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| நிரல் I | நிரல் II<br>இனப் பெயர் | நிரல் III<br>உட்கொள்வழி/<br>மருந்தின் தன்மை | நிரல் IV<br>வீரியம் | நிரல் V<br>அதிகபட்ச சில்லறை விலை (இலங்கை ரூபா) |
|---|---|---|---|---|
| 10 | செபலெக்சின் | மாத்திரை/ வில்லை | 250 மி.கி. | 9.85 |
| | செபலெக்சின் | மாத்திரை/ வில்லை | 500 மி.கி. | 18.02 |
| | செபலெக்சின் | வாய்மூல கரைசல் மருந்து | 125 மி.கி. / 5 மி.லீ. | 318.32 |
| | | | | |
| 11 | செவிக்சிம் | மாத்திரை/ வில்லை | 100 மி.கி. | 27.63 |
| | செவிக்சிம் | மாத்திரை/ வில்லை | 200 மி.கி. | 51.30 |
| | செவிக்சிம் | வாய்மூல கரைசல் மருந்து | 100 மி.கி./ 5 மி.லீ. | 414.41 |
| | | | | |
| 12 | அம்லொடிபின் | மாத்திரை/ வில்லை | 5 மி.கி. | 18.38 |
| | அம்லொடிபின் | மாத்திரை/ வில்லை | 10 மி.கி. | 25.59 |
| | | | | |
| 13 | டில்ரியாசெம் | மாத்திரை/ வில்லை | 30 மி.கி. | 3.25 |
| | டில்ரியாசெம் | மாத்திரை/ வில்லை | 60 மி.கி. | 10.70 |
| | டில்ரியாசெம் | மாத்திரை/ வில்லை | 90 மி.கி. | 25.71 |
| | | | | |
| 14 | லொசார்ட்டன் பொட்டாசியம் | மாத்திரை/ வில்லை | 25 மி.கி. | 8.83 |
| | லொசார்ட்டன் பொட்டாசியம் | மாத்திரை/ வில்லை | 50 மி.கி. | 12.38 |
| | | | | |
| 15 | லொசார்ட்டன் + ஹல்ட்ரோகுளோரோ தலாசைட் | மாத்திரை/ வில்லை | 62.5 மி.கி. | 23.36 |
| | | | | |
| 16 | எனலபிரில் | மாத்திரை/ வில்லை | 5 மி.கி. | 7.21 |
| | எனலபிரில் | மாத்திரை/ வில்லை | 10 மி.கி. | 12.14 |
| | | | | |
| 17 | அட்டனொலொல் | மாத்திரை/ வில்லை | 25 மி.கி. | 3.60 |
| | அட்டனொலொல் | மாத்திரை/ வில்லை | 50 மி.கி. | 5.29 |
| | அட்டனொலொல் | மாத்திரை/ வில்லை | 100 மி.கி. | 15.62 |
| | | | | |
| 18 | நிபெடிபின் - நிலைபேறான விடுவிப்பு | மாத்திரை/ வில்லை | 20 மி.கி. | 4.45 |
| | | | | |
| 19 | குளோபிடொக்ரெல் | மாத்திரை/ வில்லை | 75 மி.கி. | 21.03 |
| | | | | |
| 20 | அட்டோர்வஸ்ட்டடின் | மாத்திரை/வில்லை | 5 மி.கி. | 7.72 |
| | அட்டோர்வஸ்ட்டடின் | மாத்திரை/ வில்லை | 10 மி.கி. | 13.40 |
| | அட்டோர்வஸ்ட்டடின் | மாத்திரை/ வில்லை | 20 மி.கி. | 21.14 |
| | அட்டோர்வஸ்ட்டடின் | மாத்திரை/வில்லை | 40 மி.கி. | 29.74 |
| | | | | |
| 21 | ரொசுவஸ்ட்டடின் | மாத்திரை/ வில்லை | 5 மி.கி. | 25.83 |
| | ரொசுவஸ்ட்டடின் | மாத்திரை/ வில்லை | 10 மி.கி. | 44.44 |
| | | | | |
| 22 | ரெல்மிசார்ட்டன் | மாத்திரை/ வில்லை | 20 மி.கி. | 12.25 |
| | ரெல்மிசார்ட்டன் | மாத்திரை/ வில்லை | 40 மி.கி. | 19.46 |
| | ரெல்மிசார்ட்டன் | மாத்திரை/ வில்லை | 80 மி.கி. | 36.52 |
| | | | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| நிரல் I | நிரல் II<br>**இனப் பெயர்** | நிரல் III<br>**உட்கொள்வழி/ மருந்தின் தன்மை** | நிரல் IV<br>**வீரியம்** | நிரல் V<br>**அதிகபட்ச சில்லறை விலை (இலங்கை ரூபா)** |
|---|---|---|---|---|
| 23 | அஸ்பிரின் | மாத்திரை/ வில்லை | 75 மி.கி. | 3.60 |
| | அஸ்பிரின் | மாத்திரை/ வில்லை | 100 மி.கி. | 6.37 |
| | | | | |
| 24 | மெட்போர்மின் | மாத்திரை/ வில்லை | 500 மி.கி. | 4.75 |
| | மெட்போர்மின் - நிலைபேறான விடுவிப்பு | மாத்திரை/ வில்லை | 500 மி.கி. | 9.25 |
| | மெட்போர்மின் | மாத்திரை/ வில்லை | 850 மி.கி. | 8.89 |
| | | | | |
| 25 | கிலிபென்க்லமைட் | மாத்திரை/ வில்லை | 5 மி.கி. | 2.64 |
| | | | | |
| 26 | கிலிக்லசைட் | மாத்திரை/ வில்லை | 80 மி.கி. | 13.58 |
| | | | | |
| 27 | தைரொக்சீன் | மாத்திரை/ வில்லை | 50 மைக்ரோ. கி. | 7.33 |
| | தைரொக்சீன் | மாத்திரை/ வில்லை | 100 மைக்ரோ. கி. | 10.94 |
| | | | | |
| 28 | கிலிபிசைட் | மாத்திரை/ வில்லை | 5 மி.கி. | 9.50 |
| | | | | |
| 29 | இபியுபுரோபென் | மாத்திரை/ வில்லை | 200 மி.கி. | 1.33 |
| | இபியுபுரோபென் | மாத்திரை/ வில்லை | 400 மி.கி. | 4.45 |
| | | | | |
| 30 | டிக்லோபெனக் சோடியம் | மாத்திரை/ வில்லை | 50 மி.கி. | 15.62 |
| | டிக்லோபெனக் சோடியம் | மாத்திரை/ வில்லை | 100 மி.கி. | 18.14 |
| | | | | |
| 31 | டிக்லோபெனக் பொட்டாசியம் | மாத்திரை/ வில்லை | 50 மி.கி. | 13.16 |
| | | | | |
| 32 | பரசிட்டமோல் | மாத்திரை/ வில்லை | 500 மி.கி. | 1.57 |
| | | | | |
| 33 | சோடியம் வல்புரோஏட் | மாத்திரை/ வில்லை | 200 மி.கி. | 10.81 |
| | | | | |
| 34 | ரிஸ்பெரிடோன் | மாத்திரை/ வில்லை | 1 மி.கி. | 9.50 |
| | ரிஸ்பெரிடோன் | மாத்திரை/ வில்லை | 2 மி.கி. | 11.11 |
| | | | | |
| 35 | ஒலன்சபின் | மாத்திரை/ வில்லை | 5 மி.கி. | 12.01 |
| | ஒலன்சபின் | மாத்திரை/ வில்லை | 10 மி.கி. | 24.98 |
| | | | | |
| 36 | கார்பமசெபின் | மாத்திரை/ வில்லை | 200 மி.கி. | 14.41 |
| | | | | |
| 37 | அல்ப்ரசொலாம் | மாத்திரை/ வில்லை | 0.25 மி.கி. | 7.81 |
| | அல்ப்ரசொலாம் | மாத்திரை/ வில்லை | 0.5 மி.கி. | 11.90 |
| | | | | |
| 38 | புளொஒக்செட்டின் | மாத்திரை/ வில்லை | 20 மி.கி. | 13.21 |
| | | | | |
| 39 | கபாபென்டின் | மாத்திரை/ வில்லை | 100 மி.கி. | 20.12 |
| | கபாபென்டின் | மாத்திரை/ வில்லை | 300 மி.கி. | 39.82 |
| | | | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| நிரல் I | நிரல் II<br>இனப் பெயர் | நிரல் III<br>உட்கொள்வழி/ மருந்தின் தன்மை | நிரல் IV<br>வீரியம் | நிரல் V<br>அதிகபட்ச சில்லறை விலை (இலங்கை ரூபா) |
|---|---|---|---|---|
| 40 | பெக்லொமெதசோன் | டீபீ வில்லை (மூச்சினால் உள்வாங்குதல்) | 200 மைக்ரோ. கி. | 7.21 |
| | பெக்லொமெதசோன் | டீபீ வில்லை (மூச்சினால் உள்வாங்குதல்) | 400 மைக்ரோ. கி. | 8.17 |
| | பெக்லொமெதசோன் | மூச்சியல் கருவி (200 மருந்தளவுகள்) | 100 மைக்ரோ. கி. | 609.61 |
| | பெக்லொமெதசோன் | மூச்சியல் கருவி (200 மருந்தளவுகள்) | 250 மைக்ரோ. கி. | 673.87 |
| | | | | |
| 41 | சல்புயுட்டமோல் | டீபீ வில்லை (மூச்சினால் உள்வாங்குதல்) | 200 மைக்ரோ. கி. | 4.80 |
| | சல்புயுட்டமோல் | டீபீ வில்லை (மூச்சினால் உள்வாங்குதல்) | 400 மைக்ரோ. கி. | 6.61 |
| | சல்புயுட்டமோல் | மூச்சியல் கருவி (200 மருந்தளவுகள்) | 100 மைக்ரோ. கி. | 372.37 |
| | | | | |
| 42 | மீதைல் பிரெட்னிசெலோன் | மாத்திரை/ வில்லை | 4 மி.கி. | 14.23 |
| | மீதைல் பிரெட்னிசெலோன் | மாத்திரை/ வில்லை | 16 மி.கி. | 49.25 |
| | | | | |
| 43 | ஓமிப்ரசோல் | மாத்திரை/ வில்லை | 20 மி.கி. | 5.41 |
| | | | | |
| 44 | பன்ட்டப்ரசோல் | மாத்திரை/ வில்லை | 20 மி.கி. | 20.42 |
| | பன்ட்டப்ரசோல் | மாத்திரை/ வில்லை | 40 மி.கி. | 33.63 |
| | | | | |
| 45 | எசொமிப்ரசோல் | மாத்திரை/ வில்லை | 20 மி.கி. | 24.26 |
| | எசொமிப்ரசோல் | மாத்திரை/ வில்லை | 40 மி.கி. | 46.13 |
| | | | | |
| 46 | டொம்பெரிடோன் | மாத்திரை/ வில்லை | 10 மி.கி. | 6.49 |
| | | | | |
| 47 | ரபிப்பிரசோல் | மாத்திரை/ வில்லை | 10 மி.கி. | 13.58 |
| | ரபிப்பிரசோல் | மாத்திரை/ வில்லை | 20 மி.கி. | 25.89 |
| | | | | |
| 48 | அலன்றொனிக் அமிலம் | மாத்திரை/ வில்லை | 70 மி.கி. | 121.80 |
| | | | | |
| 49 | செப்டசிடிம் | ஊசி மருந்து | 500 மி.கி. | 549.12 |
| | செப்டசிடிம் | ஊசி மருந்து | 1 கி. | 915.20 |
| | | | | |
| 50 | செப்ரியக்சோன் | ஊசி மருந்து | 250 மி.கி. | 274.56 |
| | செப்ரியக்சோன் | ஊசி மருந்து | 500 மி.கி. | 514.80 |
| | செப்ரியக்சோன் | ஊசி மருந்து | 1 கி. | 800.80 |
| | | | | |
| 51 | செபோடக்சிம் | ஊசி மருந்து | 500 மி.கி. | 257.40 |
| | செபோடக்சிம் | ஊசி மருந்து | 1 கி. | 429.00 |
| | | | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| நிரல் I | நிரல் II<br>**இனப் பெயர்** | நிரல் III<br>**உட்கொள்வழி/ மருந்தின் தன்மை** | நிரல் IV<br>**வீரியம்** | நிரல் V<br>**அதிகபட்ச சில்லறை விலை (இலங்கை ரூபா)** |
|---|---|---|---|---|
| 52 | புளுகணசோல் | மாத்திரை/ வில்லை | 50 மி.கி. | 28.60 |
| | புளுகணசோல் | மாத்திரை/ வில்லை | 150 மி.கி. | 51.48 |
| | | | | |
| 53 | இன்சுலின் சொலியூபல் ஹியூமன் | ஊசி மருந்து | 100 IU/1 மி.லீ. (10 மி.லீ. வயல்) | 1,372.80 |
| | இன்சுலின் சொலியூபல் ஹியூமன் | ஊசி மருந்து | 100 IU/1 மி.லீ. (3 மி.லீ. கார்ட்ரிஜ்) | 686.40 |
| | இன்சுலின் ஐசொபேன் ஹியூமன் | ஊசி மருந்து | 100 IU/1 மி.லீ. (10 மி.லீ. வயல்) | 1,372.80 |
| | இன்சுலின் ஐசொபேன் ஹியூமன் | ஊசி மருந்து | 100 IU/1 மி.லீ. (3 மி.லீ. கார்ட்ரிஜ்) | 686.40 |
| | பைபேசிக் ஐசோபேன் இன்சுலின் (இன்சுலின் சொலுபல் ஹியுமன் 30ஐயு/1 மி லீ., இன்சுலின் ஐசொபேன் ஹியுமன் 70ஐயு/1 மி.லீ. கலவையாக) | ஊசி மருந்து | 100 IU/1 மி.லீ. (10 மி.லீ. வயல்) | 1,372.80 |
| | பைபேசிக் ஐசோபேன் இன்சுலின் (இன்சுலின் சொலுபல் ஹியுமன் 30ஐயு/1 மி. லீ., இன்சுலின் ஐசொபேன் ஹியுமன் 70ஐயு/1 மி.லீ. கலவையாக) | ஊசி மருந்து | 100 IU/1 மி.லீ. (3 மி.லீ. கார்ட்ரிஜ்) | 686.40 |
| | | | | |
| 54 | கிலிமிபிரைட் | மாத்திரை/வில்லை | 1 மி.கி. | 8.18 |
| | கிலிமிபிரைட் | மாத்திரை/வில்லை | 2 மி.கி. | 11.61 |
| | கிலிமிபிரைட் | மாத்திரை/வில்லை | 3 மி.கி. | 19.45 |
| | கிலிமிபிரைட் | மாத்திரை/வில்லை | 4 மி.கி. | 21.16 |
| | | | | |
| 55 | சிடாக்லிப்டின் | மாத்திரை/வில்லை | 25 மி.கி. | 17.16 |
| | சிடாக்லிப்டின் | மாத்திரை/வில்லை | 50 மி.கி. | 32.60 |
| | சிடாக்லிப்டின் | மாத்திரை/வில்லை | 100 மி.கி. | 55.48 |
| | | | | |
| 56 | தம்சுலொசின் | மாத்திரை/ வில்லை | 0.40 மி.கி. | 24.02 |
| | | | | |
| 57 | மொன்ட்டிலுகாஸ்ட் | மாத்திரை/ வில்லை | 4 மி.கி. | 13.73 |
| | மொன்ட்டிலுகாஸ்ட் | மாத்திரை/ வில்லை | 5 மி.கி. | 17.16 |
| | மொன்ட்டிலுகாஸ்ட் | மாத்திரை/ வில்லை | 10 மி.கி. | 24.02 |
| | | | | |
| 58 | பிரீகபலின் | மாத்திரை/ வில்லை | 50 மி.கி. | 14.01 |
| | பிரீகபலின் | மாத்திரை/ வில்லை | 75 மி.கி. | 17.73 |
| | பிரீகபலின் | மாத்திரை/ வில்லை | 100 மி.கி. | 22.02 |
| | பிரீகபலின் | மாத்திரை/ வில்லை | 150 மி.கி. | 27.46 |
| | பிரீகபலின் | மாத்திரை/ வில்லை | 300 மி.கி. | 45.19 |
| | | | | |
| 59 | டொபிரமேட் | மாத்திரை/ வில்லை | 25 மி.கி. | 22.88 |
| | டொபிரமேட் | மாத்திரை/ வில்லை | 50 மி.கி. | 36.61 |
| | டொபிரமேட் | மாத்திரை/ வில்லை | 100 மி.கி. | 59.49 |
| | | | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| நிரல் I | நிரல் II<br>**இனப் பெயர்** | நிரல் III<br>**உட்கொள்வழி/ மருந்தின் தன்மை** | நிரல் IV<br>**வீரியம்** | நிரல் V<br>**அதிகபட்ச சில்லறை விலை (இலங்கை ரூபா)** |
|---|---|---|---|---|
| *60* | *லமொட்ரிஜீன்* | *மாத்திரை* | *25 மி.கி.* | *13.73* |
| | *லமொட்ரிஜீன்* | *மாத்திரை* | *50 மி.கி.* | *24.02* |
| | *லமொட்ரிஜீன்* | *மாத்திரை* | *100 மி.கி.* | *40.04* |

05-755

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*